## தலைப்பு 266 – வவுனியா மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 31ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வவனியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தரப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகததின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கணடு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடரப்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் உப்பிட முடியாதுள்ளன. மேலும், முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்த சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரிவு 7(ii) இணங்க, ACA-3 படிவத்தில் (கட்டு நிதிக் கணக்கு) சேர்க்கப்பட வேண்டும். இருப்பினும், மாவட்ட செயலகத்தின் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மற்ற அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு சேகரிக்கப்பட்ட ரூபா 56,713,387 வருவாய் நிதி செயல்திறன் கூற்றில் சேர்க்கப்படாமல் வருமான சீராக்க கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக மாவட்டச் செயலகத்தின் நிதிச் செயத்திறன கூற்றில் ரூபா 56,713,387 குறைவடைந்து காணப்படுகின்றன. | சேகரிக்கப்படும் வருமானங்கள் திறைசேரியின் கட்டு நிதி கணக்கில் ACA -3 படிவத்தில் காட்டப்பட வேண்டும். | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரிவு 7(ii) இற்க இணங்க ACA -3 இல் சேர்க்கப்பட்டுள்ளது. மற்றும் அமைச்சின் வழிகாட்டலின் படியே ACAF தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமைக்கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக்கூற்றின் படி மூலதன வருமானத்தினை கையாளப்படுதல் தொடர்பான வருமானம் ரூபா 52,999,580 ஆக காணப்பட்டன. நடைமுறையல்லாச் சொத்துக்களின் அறிக்கை (ACA-6) படி ரூபா 39,951,796 ஆக காணப்பட்டிருந்தன. இவ்விரு வருமான தொகைகளுக்கிடையே ரூபா 13,047,784 பெறுமதியான வேறுபாடுகள் காணப்பட்டன. | முதிப்பீடுகள் சரியான இனங்காணப்பட்டு கணக்குகளுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். | மொத்த சொத்து மதிபிடப்பட்ட மீதி ரூபா 52,999,580 ஆக காணப்பட்டன. CIGAS திட்டத்தின் இருப்பு மற்றும் பதிவேடுகள் சமமற்றவை என்பதால், புதிய CIGAS திட்டம் சொத்தில் சேர்க்கப்படும்போது சனவரி முதல் ஆகஸ்ட் வரையிலான கொள்வனவு மதிப்பு ஆரம்ப நிலுவையில் சேர்க்கப்பட்டுள்ளது. ACA-6 செப்டம்பர் முதல் திசெம்பர் வரையிலான கொள்வனவு மட்டுமே அடங்கும். தற்போது, சொத்துக்கள் CIGAS இற்கும் திணைக்களப் பதிவேட்டிற்கும் இடையில் ஒப்பிடப்படுகின்றன. |
| (ஆ) | மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு செயற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பௌதீக ரீதியான கட்டுமான பெறுமதியான ரூபா 1,167,905,185 ஆக காட்டப்பட்டிருந்தன. நிதி நிலைமைக்கூற்றின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 39,951,796 ஆக காட்டப்பட்டிருந்தன. இதன்படி, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கும் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களை மதிப்பிடுதல் தொடர்பான ACA -6 படிவத்திற்கு இடையில் ரூபா 1,127,953,389 வித்தியாசம் காணப்பட்டது. | மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதிகளும் நிதி நிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளும் இணங்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றின் மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கீழ் மாவட்டச் செயலகத்தின் மற்றும் ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களத்தின் சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிதி நிலைமைக்கூற்றானது மாவட்டச் செயலகத்தின் ரூபா 71,610,158 பெறுமதியான சொத்துக்களை மாத்திரமே உள்ளடக்ககின்றன. |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காசுப்பாய்ச்சல் கூற்றின் படி, தனிப்பட்ட ஊதியங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் வைப்புத்தொகையை செலுத்துவதற்கான மதிப்பு ரூபா 217,842,503 எனக் கூறப்பட்டுள்ளது, அதே நேரத்தில் மாதாந்த அறிக்கையின் படி வைப்புத்தொகை மொத்தம் ரூபா 259,672,832 காணப்பட்டன. இதன்படி, காசு பாய்ச்சல் கூற்றுக்கும் மற்றும் வைப்புத்தொகை செலுத்துவதில் மாதாந்த அறிக்கைக்கும் இடையே ரூபா 41,830,329 வேறுபாடுகள் காணப்பட்டது. | தேவைகள் சரியாக அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் | காசாக செலவிடப்பட்டவை மட்டுமே காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படும். வைப்புத் தொகையின் பெரும் பகுதி X – Entry இனால் மேற்கொள்ளப்பட்டன. |
| (ஆ) | மீளாய்வாண்டில் அரசு அதிகாரிகளுக்கு முற்பணம் வழங்குவதன் மூலம் பெறப்பட்ட ரூபா 2,495,280 வட்டி, மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சலான கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | முற்பணக்கணக்கின் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட வேண்டும். | 2018 நெவம்பர் 21 ஆம் திகதியிட்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் பந்தி 7 (ii) குறிப்பாக ACA-I இற்கு பொருந்தாது. ACA-3இல் சேர்க்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டில் பௌதீக சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 165,490 தொகை முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல் என காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சொத்து விற்பனை நடவடிக்கைகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும் | 2018 நெவம்பர் 21 ஆம் திகதியிட்ட அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் பந்தி 7 (ii) குறிப்பாக ACA-I இற்கு பொருந்தாது. ACA-3இல் சேர்க்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | படிவம் ஏ.சி.ஏ -6 இன் படி, நடைமுறையல்லாச் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட ரூபா 495,451,591 தொகை, பௌதீக சொத்துக்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணம் என்பன காசுப்பாய்ச்சல் கூற்றின் மூதலீட்டு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | படிவம் ஏசிஏ -6 இன் படி, நடைமுறை அல்லாத சொத்துகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட வேண்டும் | ரூபா 495,451,591 தொகை விற்பனை என தவறாகக் கூறப்பட்டுள்ளதுடன், ரூபா 182,260 தொகை மட்டுமே உண்மையான விற்பனையாக சேர்க்கப்பட வேண்டும். நிலுவை சொத்து பரிமாற்றமாக குறிப்பிடப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 சனவரி 5 ஆம் திகதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2012 இன் பந்தி 3.1 இன் படி, மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் உள்ளடங்கிய மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குழுவினால் பந்தி 3.2 அல் குறிப்பிடப்பட்டதன் படி ஆவணங்களளை ஆராய்வதன் மூலம் தகுதியானவற்றினை மதிப்பாய்வ செய்யப்பட்டு வேலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தினால் ரூபா 21,271,876 பெறுமதியான 33 செயற்திட்டங்கள் பிரதேச சமூக நலன்புரி சங்கத்திடம் மாற்றியமைக்கான பொருத்தமான கணக்காய்வுக்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2012 சனவரி 5 ஆம் திகதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2012 இன் பந்தி 3.1 இன் படி, மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள் உள்ளடங்கிய மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குழுவினால் பந்தி 3.2 அல் குறிப்பிடப்பட்டதன் படி ஆவணங்களளை ஆராய்வதன் மூலம் தகுதியானவற்றினை மதிப்பாய்வு செய்தல் வேண்டும் | பிரதேச செயலாளர், தொழில்நுட்ப அலுவலர் மற்றும் கிராம சேவகர்கள் அடங்கிய குழுவின் பரிந்துரைகளின் பேரில் பிரதேச செயலகத்தின் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் |
|---|---|---|

| ------------------------------------- | ---------------- | கருத்துரை ----------------------------------------- |
|---|---|---|
| மாவட்ட அமைச்சிற்கு நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு ஐயாவினாவின் படி எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏறப் ாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) 1969ஆம் ஆண்டின் இலக்கம் 16 மற்றும் 1981 ஆம் ஆண்டின் இலக்கம் 27 (திருத்தம்) காணி அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) அத்தியாயம் 464 மற்றும் 03 ஆவது அட்டவணையின் பிரிவு XII இன் துணைப்பிரிவு 172 | வவுனியா பிரதேச செயலகப் பகுதியில் அரசு நன்கொடையளித்த 14 ஏக்கர், இரண்டு ரூட் மற்றும் 5 பெர்ச் காணி உரிமையாளரின் குழந்தைகளுக்கு | 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் 464 ஆம் அத்தியாயத்தின் பிரிவு XII இன் துணைப்பிரிவு 172 மற்றும் 1981 ஆம் | 1969ஆம் ஆண்டின் இலக்கம் 16 மற்றும் 1981 ஆம் ஆண்டின் இலக்கம் 27 (திருத்தம்) காணி அபிவிருத்தி சட்டத்தின் 464 ஆம் பிரிவின் மற்றும் XII |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மட்டுமே ஒப்படைக்க முடியும். 2010 ஏப்ரல் 27 ஆம் திகதியில் பிரதேச செயலாளரால் காணி உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்தன எனினும் இச்சட்டத்தால் இயற்றப்பட்ட அதிகாரங்களை மீறப்பட்டிருந்தன. | ஆண்டின் 27 மற்றும் 03 ஆவது அட்டவணையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| | (ii) அத்தியாயம் 464 இன் பிரிவு V | நீர்ப்பாசனத்திற்காக வழங்கப்பட்ட காணிகள் வேறு எந்த வணிக நோக்கத்திற்கோ அல்லது வேறு நோக்கங்களுக்காகவோ பயன்படுத்த முடியாது எனினும் ஓமந்தையில், வவுனியாவில் 02 ரூட், 2.59 பெர்ச்சில் உள்ள காணிகள் இந்தியன் மசகு எண்ணெய் நிறுவனத்திற்கு 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றன. | 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் 464 ஆம் அத்தியாயத்தின் பிரிவு XII இன் துணைப்பிரிவு 172 மற்றும் 1981 ஆம் ஆண்டின் 27 மற்றும் 03 ஆவது அட்டவணையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அது தொடர்பான எந்தவிதமான ஆவணங்களுமில்லை. ஆவை தவறு என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். காணி ஆணையாளரின் பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின்அத்தியாயம் VIII இன் பிரிவு 10.1 | திணைக்களத்தின் அன்றாட நடவடிக்கைகளை பொது விடுமுறை நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் மேற்கொண்டமைக்காக ரூபா 43,265 ஆன கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | தாபன விதிக்கோவைக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | திடீரென்று நிறைவேற்ற வேண்டிய வேலைகளைச் செய்ய விடுமுறை கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இனிவரும் காலத்தில் தரப்படும் கணக்காய்வு ஐயாவினாவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி 237 (அ) | வவுனியா மாவட்டச் செயலகத்தினால் ரூபா 4,824,150 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட நன்கொடை பொருட்கள் தொடாடபாக களஞ்சிய பாதுகாவலாளியிடமி | நன்கொடை பொருட்கள் களஞ்சியத்தில் முறையாகப் பெறப்பட்டன என்பதற்கு களஞ்சிய காப்பாளரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் கொடுப்பனவு சீட்டையில் இணைக்கப்பட | கணக்காய்வு ஐயாவினாவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்ள குறிப்பிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ருந்த உறுதிப்படுத்தல் சான்றிதழ் பெறப்பட்டது. 19 சந்தர்ப்பத்தில் சரியான முறையில் களஞ்சியசாலையினால் பெறப்பட்டிருந்தும் அதற்கான சான்றுகள் கொடுப்பனவுச் சீட்டையில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | |
| (ஈ) | இலங்கை சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டுதலின் ஏற்பாடுகள் - 2006<br>------------------------------ | | | |
| | (i) பிரிவு 2.6.1 | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 14 சந்தர்ப்பங்களில் வவுனியாவின் மாவட்டச் செயலகத்தால் வாங்கப்பட்ட கணினி மற்றும் ரூபா 4,781,640 மதிப்புள்ள கணினி மற்றும் உபகரணங்களை ஆராய்ந்து ஒரு அறிக்கையை வெளியிடப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சம்பந்தப்பட்ட கணினி மற்றும் உபகரணங்களை ஆராய்ந்து, அத்தகைய விவரங்கள் தொடர்புடைய விவரக்குறிப்பின்படி பெறப்பட்டதாக ஒரு அறிக்கையை வெளியிட வேண்டும். | ரூபா 3,438,500 மதிப்புள்ள இயந்திரங்களுக்கான விலைமனு கோரலின் போது ஒரு நபர் மட்டுமே விலைமனு அனுப்பியுள்ளார், மேலும், அந்த விலைமனுவிலிருந்து பொருத்தமானவை கொள்வனவு செய்யப்பட்டது. கணினிகளின் விவரக்குறிப்புகள் மற்றும் ரூபா 275,650 மதிப்புள்ள சி.சி.டி.வி கேமரா ஆகியவை இணக்கமாக இருந்தன கொள்வனவு விவரக்குறிப்புகள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் பெறப்படவில்லை. ரூபா 643,490 மதிப்புள்ள உபகரணங்களை வழங்க வழங்குனர்கள் வவுனியாவில் இல்லாததால், புதுக்குடிருப்பு பிரதேச செயலகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அறிக்கையின்படி கொள்வனவு செய்யப்பட்டது. |
| | (ii) பிரிவு 6.3.8 | சந்தை விலை நிர்ணய முறையின் கீழ் அழைக்கப்பட்ட பகிரங்க விலைமனு கோரலினை திறக்கும் போது தொடக்க விலைமனு தொகையானது அறிக்கையில் வவுனியா தெற்கு பிரதேச செயலகம் பதிவு செய்யவில்லை. | சந்தை விலை அமைப்பின் கீழ் அழைக்கப்பட்ட பகிரங்க விலைமனுக்கள் திறக்கப்படும் போது அறிக்கையில் தொடக்க பதிவுகள் இருக்க வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு ஐயாவினாவின் படி நடவடிக்கை எடுக்கப்படும் |
| | (iii) பிரிவு 3.5 மற்றும் 3.6 2017 மாாச் 15 ஆம் திகதி கூட்ட குறிப்பு 33 | ஒரு நாளைக்கு ஒரு நடவடிக்கைக்கு நேரடி கொள்முதல் ரூபா 15,000 இனை விட அதிகரிக்க முடியாது. ஆனால் மாவட்ட செயலகம் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகம் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 225,420 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிக்கு இணங்க செயற்பட வேண்டும் | இந்த கொள்முதல் பெரும்பாலானவை பிற அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இந்த கொள்முதல் குறித்து உள்ளக கணக்காய்வு குழுக்கள் ஆலோசிக்கப்பட்டன, ஆனால் பதில் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2012 சனவரி 13 ஆம் திகதியிடப்பட்ட இலக்க DMA/2012/07 இன் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி | உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளை திறம்படச் செய்வதற்காக கணினிமயமாக்கப்பட்ட தகவல் அமைப்பில் (சிஐஎஸ்) உள்ளக கணக்காய்வு செய்வதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் கேள்வித்தாள்களை உள் கணக்காய்வாளர்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தாலும், உள்ளக கணக்காய்வாளர்கள் சுற்றறிக்கைக்கு இணங்கி | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்படவில்லை. | | |
| (ஊ) | 2018/09/04 திகதியிட்ட இலக்கம் 22/2018 மற்றும் 2018/07/11 தியதியிட்ட இலக்கம் 03/2018 இணைந்த சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2018/07/23 திகதியிட்ட 19/2018 அரச நிர்வாக சுற்றறிக்கை | அரசாங்க அதிகாரிகள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இடமாற்றம் செய்ய வேண்டியிருந்தாலும் வவுனியா பிரதேச செயலகத்தில் 136 அதிகாரிகள் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகவே சேவையினை புரிகின்றனர். | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும் | ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய பிற அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் உள்ள அதிகாரிகள் தொடர்பான விபரங்களை உரிய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டு மற்ற அதிகாரிகள் குறித்து மாவட்ட செயலாளருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. |
| (எ) | 2016 திசெம்பர் 29 திகதியிடப்பட் இலக்கம் 30/2016 ஆம் அரச நிர்வாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | வேங்கலச்செட்டிக்குளம் பிரதேச செயலகத்தின் பாவனையிலுள்ள 06 வாகனங்களுக்கும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும் | 06 வாகனங்களில் இருந்து இரண்டு இடங்களுக்கு எரிபொருள் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நான்கு ராக்டர்கள் போன்ற பிற வாகனங்கள் அவ்வப்போது மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன, எனவே அந்த நேரத்தில் எரிபொருளை பரிசோதிக்கின்றோம் |
| (ஏ) | 2008 ஆகஸ்ட் 20 ஆம் திகதியிடப்பட்ட 2008/04 காணி மேம்பாட்டு சுற்றறிக்கை | இந்த சுற்றறிக்கை அரசாங்கத்தால் காணி நன்கொடையளித்தவர்களுக்கு திருப்பித் தர வேண்டாம் என்று அரசாங்கத்திற்கு அறிவுறுத்திய போதிலும், வவுனியா பிரதேச செயலாளர் ஓமநதையிலுள்ள இரண்டு ரூட்ஸ் காணி முன்னாள் மாவட்ட செயலாளரின் தாயாருக்கு வழங்கப்பட்டிருந்தன. | 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்தம்) சட்டத்தின் 464 ஆம் அத்தியாயத்தின் பிரிவு XII இன் துணைப்பிரிவு 172 மற்றும் 1981 ஆம் ஆண்டின் 27 மற்றும் 03 ஆவது அட்டவணையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி மேம்பாட்டுச் சட்டத்தின் பன்னிரெண்டாம் அத்தியாயத்தின் 138 வது பிரிவும், 1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்தமும் (திருத்தம்) மாவட்டச் செயலாளரியால் பிரதேச செயலாளரியால் மாற்றலாம் என்று வழங்குகிறது. அதன்படி, 3 வது அட்டவணையை புறக்கணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

2 நிதி முகாமைத்துவம்

2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் தொடர்பான நிதி ஒழுங்கு விதி 50இற்கு அமைய மதிப்பீட்டின் சரியானகவும் துல்லியமாகவும் தயாரித்து வழங்குதல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். இருப்பினும் ஒரு மீண்டெழும் செலவின விடயத்திற்கு ரூபா 100,000 ஏற்பாடு செய்யப்பட்டதிற்கு ரூபா 900,000 தொயைானது வேறொரு செலவிட விடய ஒதுக்கீட்டிலிருந்த பெறப்பட்டிருந்தன. மொத்த ஏற்பாட்டில் 900 சதவீதமாக காணப்படுகின்றது. | தேவைகள் சரியாக அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் | பிரதேச செயலகத்தின் அலுவலகத்தினால் புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்படுவதால், 2018 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வழங்கப்பட்டிராதமையினால் ரூபா 100,000 ஏற்பாடு செய்யப்பட்டது எனினும் அதிகமாக வழங்கப்பட்டதனால் நிதி ஒழுங்கு விதி 66 படி ரூபா.900,000 மாற்றப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதி ஒழுங்கு விதி 66 இன் கீழ் இயந்திர மற்றும் உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 பெறுமதியான ஏற்பாடுகள் வேறு விடயத் தலைப்புக்கு மாற்றப்பட்டிருந்தன. | நிதி ஒழுங்கு விதி 50 இன் படி மதிப்பீடுகள் கட்டுப்பாட்டுத் தன்மையுடன் மற்றும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டும் | ஒரு ஜெனரேட்டரை வாங்க வேண்டிய தெவை காணப்பட்ட போதிலும் அதனை வாங்க பணம் போதமையினால் அத்தொகையினை புதிய மாநாட்டு மண்டபத்திற்கு குளிரூட்டி வாங்குவதற்கு மாற்றப்பட்டு குளிரூட்டி கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தன. |
| (இ) | இரு விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 1,000,000 ஆகவுள்ளன. இவற்றில் ரூபா 343,400 சேமிக்கப்பட்டிருந்தன. ஏற்பாட்டில் சேமிப்பு வீதம் 34 ஆக காணப்படுகின்றன. | தேவைகள் சரியாக அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் | ஆண்டின் தொடக்கத்தில் செலவுகள் அதிகரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் இறுதி மாதங்களில் எதிர்பாராத வகையில் சேமிப்பு ஏற்பட்டுள்ளன. |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஒருங்கிணைப்பு பணியகத்தினால் வவுனியா வடக்கு பிரதேச செயலகம் பகுதியில் 2017 திசெம்பர் 27 ஆம் திகதி ரூபா 4,130,000 செலவில் நிறைவடைந்த பழ செயலாக்க தொழிற்துறை கட்டத்தினை பிராந்திய பழ விவசாயிகள் கூட்டுறவு சங்கத்திடம் 2018 பெப்ரவரி 07ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், இந்த கட்டிடம் 2018 திசெம்பர் 4 ஆம் திகதி வரை பழ பதப்படுத்தும் தொழிலுக்கு பயன்படுத்தப்படவில்லை, மேலும் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பழ பதப்படுத்தும் தொழிலுக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை எவ்வாறு பெறுவது என்பது குறித்து பிரதேச செயலகம் அல்லது பழ உற்பத்தியாளர்கள் சங்கத்தால் எந்த திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கட்டடமானது ஒரு வருடத்திற்கு மேலாக பயன்படாற்றுக் காணப்படுகின்றன. | பழச் செயற்பாட்டுத் தொழிலுககான கட்டிடத்தைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | இந்தத் தொழிலுக்கான இயந்திரங்கள் இன்னும் முழுமையாகப் பெறப்பட்டிருக்காமையினால் பழ செயலாக்கத தொழில்துறைக்கான வேலையைத் தொடங்க முடியவில்லை. |
| (ஆ) | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சசுடன் இணைந்து வெங்கல செட்டிகுளத்தின் பிரதேச செயலகத பிரதேசத்திலுள்ள புதிய சின்னவிப்பிகுளம் ரஷீத்வத்தே வீதியினை ரூபா 1,077,044 பெறுமதியிலை அமைப்பதற்க நடவளக்கை மேற்கொள்ளப்பட்டன. இப்பகுதியில் சுமார் 10 ஏக்கர் தனியார் காணிகளும் உள்வாங்கப்பட்டிருந்தன. மேலும், சபையின் அதிகாரம் உள்ள பகுதியில் புதிய சாலைகள் அமைப்பதற்கு தேவையான சட்ட விதிகள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. மதிப்பிடப்பட்ட உருப்படி எண் 08 இன் படி தயாரிக்கப்பட்ட ஒரு பெயர்ப்பலகை வீதியில் நிறுவப்படவில்லை என்பதையும், திட்டத்தால் வசதி செய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாமல், ஒரு பயனாளிக்காக வீதி அமைக்கப்பட்டுள்ளன. | வீதிக் கட்டுமானத்திற்கு தேவையான சட்ட விதிகள் சம்பந்தப்பட்ட பிரதேச சபையிலிருந்து பெறப்பட வேண்டும், மேலும் பயனாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். | இப் பிரதேசத்தில் போரில் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றவும் எதிர்காலத்தில் வேலை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் இந்த வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது வீதியின் இருபுறமும் ஏழு வீடுகள் காணப்படுகின்றன. அவை கால்நடைகள் மற்றும் ஆடுகளுக்கு உணவளிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம் கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 1,925,159 ஒதுக்கீட்டில் வவுனியா தெற்கு பிரதேச செயலகம் மற்றும் வவுனியா பிரதேச செயலகம் ஆகியவற்றால் செயல்படுத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டில் ஆடை அடிப்படையிலான சிறு தொழிற்சாலைகளை நிறுவும் திட்டம் குறித்து பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நோக்கத்துடன் தையல் பயிற்சிகள் நடத்தப்பட்டன, மேலும் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டிருக்காமையினால் 2019 மே 20 இற்குள் அடைய முடியாமல் இருந்தன. | தொழிற்துறையினை ஆரம்பித்து குறிக்கோள்களை அடைய முயற்சிக்கப்பட வேண்டும். | இந்த திட்டத்தை செயல்படுத்த பயனாளிகள் ஆர்வம் காட்டாததால், சிறு ஆடை தொழிற்சாலையாக கூட்டுறவு சங்கங்களினால் மாற்றுவதற்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் கூட்டுறவு அதிகாரிகளுடன் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் தொடர்பான ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ii) | 280உபகரணங்கள் அமைச்சியால் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் அவ் உபகரணங்கள் பிரதேச செயலகத்தின் பயிற்சி நிலையத்தில் ஒரு வருடத்திற்கு மேலாக பயன்படுத்தாமல் இருப்பாக காணப்பகின்றன. | உபகரணங்களின் சரியான பயன்படுத்தபபடுகின்ற தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும். | கடந்த ஆறு மாத பயிற்சி நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு சம்பளம் வழங்கப்பட்டிருந்தன. மேலும் சம்பளக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு ஏற்பாடு இல்லாததால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு சந்தர்ப்பங்களில் இடைக்கால முற்பணம் செலுத்தப்பட்டிருந்தன. அவை 40 சதவீதத்தினை விட கூடுதலானதாக காணப்படுகின்றன. | தேவைகள் நிறைவேற்றப்பட்ட பின்னரே இடைக்காலக் முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | முன்கூட்டியே பணம் செலுத்தப்படுவதாக மதிப்பீடுகள் உள்ளன, ஆனால் எதிர்பாராத விதமாக செலவினங்களைக் குறைப்பதற்காக சில செலவினங்கள் காசோலைகள் மூலமாக செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | நிதி ஒழுங்கு விதி 371(2) (அ) பிரிவின் படி விசேட தேவைக்காக தர உத்தியோகத்தருக்கான அதிகபட்ச முற்பணத் தொகை ரூபா 100,000 கொடுப்பனவு செலுத்தமுடியும். முற்பணம் பெறப்பட்ட உத்தியோகத்தரினால் அம் முற்பணம் தீர்வு செய்யப்படுவதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் வழங்கப்பட முடியாது. இருப்பினும் இரண்டு சந்தாப்பங்களில் முற்பணம் தீர்வு செய்யப்படாது வழங்கப்பட்டுள்ளன. | இடைக்கால முற்பணமொன்று பதிவளிக்கப்பட்டிருந்த போதிலும் இடைக்கால முற்பணம் மீள வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உத்தியோகத்தரினால் பெறப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்படாதபோது அவர் எந்த முற்பணம் மீண்டும் பெறமுடியாது எனினும் எதிர்பாராத சந்தர்பத்தில் மட்டுமே பொறுப்பான அதிகாரிகள் அத்திட்டத்திற்கு அதிக பட்சம் ரூபா 100,000 வரை தேவை காணப்பட்டதினால் முன்கூட்டியே வழங்கப்பட்டது. |
| (இ) | 2015 யூலை 14 ஆம் திகதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 3/2015 இன் பந்தி (அ) இன் அடிப்படையில் உத்தியோகத்தரிற்கு மட்டுமே இடைக்கால கட்டு நிதி வழங்கப்படலாம், உத்தியோகத்தரமற்ற பணியாளர்களுக்கு கட்டுநிதி வழங்கப்படமாட்டது எனினும் உத்தியோகத்தரமற்ற பணியாளர்களுக்கு ரூபா 141,500 | இடைக்கால கட்டு நிதியானது உத்தியோக்தருக்கு மட்டுமே வழங்ககப்பட வேண்டியிருக்கின்றன. | 2019 ஆம் ஆண்டில் உத்தியோகத்தருக்கான கட்டுநிதி மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. |

வழங்கப்பட்டிருந்தன.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நிதி ஒழுங்கு விதி 371(5) இற்கு அமைய முற்பணங்கள் பெறப்பட்டு வேலைகள் நிறைவடைந்து 10 நாட்களினுள் முற்பணம் தீர்வு செய்யப்பட வேண்டும். இருப்பினும் 09 சந்தர்ப்பத்தில் வேலைகள் நிறைவடைந்தும் 13 நாட்கள் முதல் 03 மாதம் வரை முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படடிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதிக்கமைய இடைக்கால முற்பணங்கள் நோக்கம் நிறைவடைந்து 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | ஏனைய கொடுப்பனவுகள் ஆவணப்படுத்தப்பட்டு பணம் செலுத்துவதற்காகவும், தவிர்க்க முடியாத சில காரணங்களுக்காகவும் சமர்ப்பிக்கப்பட்டதால் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டில் முறையாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.4 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது வைப்புக் கணக்கில் ரூபா 812,269 பெறுமதியானது 02 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தும் காணப்படுகின்றன இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிரக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி காலங்கடந்த வைப்புக்கள் தீர்க்கப்பட வேண்டும். | இம் மீதிகள் 2019 சனவரி மாதத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கின்றன. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம், அங்கீரிக்கப்பட்ட பதவியணி, தொழில்புரிகின்ற ஊழியர்களின், வருடாந்த பாதீட்டின் அடிப்படையிலான முன்னுரிமை திட்டங்கள்,எதிர்பார்க்கப்பட்ட | சுற்றறிக்கையின் அடிப்படையில் முறையான செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளுக்கு அமைய செயல் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கின்றது. |

வெளியீட்டு மட்டங்கள் மற்றும் காசுப்பாதீடு போன்றன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 உள்நாட்டு நிதியுதவித் திட்டங்களிலிருந்து செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 19,125,502 மதிப்புள்ள 03 கட்டுமானங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில் பகிரங்கமாக அழைக்கப்பட்டிருந்தாலும், மாவட்ட பொறியாளர் மதிப்பீட்டை மீண்டும் திருத்தவில்லை, அதற்கான பொருத்தமான ஒப்பந்தக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒப்புதல் அளித்தார் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் படி. கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டன, புதிய மதிப்பீடுகளின் படி பணம் செலுத்தப்பட்டது. இந்த திருத்தப்பட்ட மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும பெறுகைக் குழுவின் அனுமதிகள் பெறப்படவில்லை. மேலும், தொழில்நுட்ப அடிப்படையில் கோரிக்கைகள் பொறியியல் மதிப்பீடுகள் மாற்றப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் பரிந்துரைகளுக்கு அனுமதிகள் பெறப்பட வேண்டும். | உண்மை மதிப்பீட்டின் 10 சதவீத எல்லைக்குள் மதிப்பீடுகள் திருத்தப்பட்டிருப்பதால் அனுமதிகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதில்லை. |
| (ஆ) | கட்டுமானங்களில் இருந்து வெங்கலசெட்டிகுளம் கட்டிடத்தைப் பிரிப்பதற்கு, பொறியியல் பரிந்துரைகளின்படி தேவைப்படும் அளவிற்கு 5 மிமீ அளவிலான கண்ணாடி தடிப்பமான கண்ணாடியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, 5 மிமீ அளவிலான தெளிவான | பொறியியலாளரின் பரிந்துரைக்கமைய கட்டடங்களுக்கான பகுதி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பிடி வைத்தல் பணத்தினைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்ணாடி பயன்படுத்தப்பட்டது. | | |
| (இ) | மேலே உள்ள பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் அளவீடுகளை சரியாக எடுத்துக்கொள்வதன் மூலம் பொறியாளர் மதிப்பீடுகளைத் தயாரிக்கவில்லை என்பதால், கட்டிடத்தின் கூரையை சரிசெய்வதில், ‘‘சி’’ வடிவத்தில் 175.2 மீட்டர் கால்வனைஸ் பர்லின்ஸ் கூடுதலாக வழங்கப்பட்டு சரி செய்யப்பட்டது. ஒப்பந்தக்காரர் வழங்கிய விகிதத்தின்படி மேற்கண்ட கூடுதல் பணிகளுக்கு மீட்டருக்கு ரூபா 1,000 செலுத்தாமல், பொறியியல் அட்டவணை (ஈ.எஸ்.ஆர்) எண் 03 இன் படி மீட்டருக்கு ரூபா 1,663 என பணம் செலுத்தப்பட்டுள்ளது. 175.2 மீட்டர் கால்வனைஸுக்கு ரூபா 116,157 கூடுதல் செலவை ஒரு மீட்டருக்கு ரூபா 663 ஆக செலுத்தப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட | மதிப்பீட்டிலுள்ள உண்மைத்தன்மையற்ற நிலையே இதற்கான காரணம். இதனை நான் குறித்துக்கொண்டுள்ளேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படமாட்டாது. |
| (ஈ) | வெங்கலச்செட்டிக்குள பிரதேச செயலகத்தின் காட்சி வீட்டைக் கட்டுவது தொடர்பான பொறியியல் மதிப்பீட்டில் ரூபா 430,375 மதிப்புள்ள 04 பொருட்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், மதிப்பீட்டின் பணி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளின் படி வெங்கலசெட்டிகுள பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவில்லை. | பொறியியலாளரின் மதிப்பீட்டின் கீழான விசேட விபரக்குறிப்பின் படி வேலை முடிவடைந்த பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீடுகளின் தவறான தன்மையே இதற்குக் காரணம், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படமாட்டாது. காட்சி வீட்டின் உச்சவரம்பு 5 மில்லிமீற்றர் என மதிப்பிடப்படடிருந்தலும், சராசரி மாடி உச்சவரம்பு 4.88 மில்லிமீற்றரினால் இது பொருத்தப்பட்டுள்ளது மற்றும் ஐயாவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள படி 3 மிமீ பொருந்தாது. பிடிப்பணம் செலுத்தப்படுவதற்கு முன்னர் ஏனைய குறைபாடுகள் தீர்க்கப்படும். |
| (உ) | பிரதேச செயலகத்தின் முதல் தளத்தை நிர்மாணிப்பது தொடர்பான பொறியியல் மதிப்பீட்டில் ரூபா 706,100 மதிப்புள்ள 02 உருப்படிகள் சேர்க்கப்பட்டிருந்தாலும், மதிப்பீட்டின் பணி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளின்படி வவுனியா பிரதெச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவில்லை, | பொறியியலாளரின் மதிப்பீட்டின் கீழான விசேட விபரக்குறிப்பின் படி வேலை முடிவடைந்த பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வ ஐயாவினாவில் பொதுவான சிறு குறைபாடுகள் உள்ளன. இது தவறுதலாக மதிப்பீட்டில் இரண்டு தடவைகள் பாதுகாப்பு நிறப்பூச்சு பூசப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. பாதுகாப்பு நிறப்பூச்சுக்க வெல்டிங புள்ளிகள் மட்டுமே போதுமானதாக காணப்பட்டது. இரும்புக் கம்பிகளின் பருமன் |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த தொகையும் ரூபா 706,100 செலுத்தப்பட்டிருந்தன. | | Vernire Calliper இயந்திரத்தினால் அளவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | வவுனியாவின் பிரதேச செயலகத்தின் முதல் தளத்தை நிர்மாணிப்பதற்கு இணையாக மேற்கொள்ளப்பட்ட நடைபாதைத் தொகுதிகள் வழங்கல் மற்றும் இடுவது தொடர்பான பணிகளில், பொறியியல் படி இரண்டு சந்தர்ப்பங்களில் தொகுதிகளின் வலிமை 15N / mm2 மற்றும் 25N / mm2 என பரிந்துரைக்கப்பட்டது. இருப்பினும், இந்த உருப்படி தொடர்பான 208 சதுர மீட்டருக்கு ரூபா 821,952 செலுத்துவதற்கு முன்பு, நடைபாதைத் தொகுதிகளின் வலிமை பொறியியல் பரிந்துரைகளுக்கு இசைவானதா என்பது குறித்து சோதனை அறிக்கைகள் பெறப்படவில்லை. | கொடுப்பனவு செலுத்துவதற்கு முன்னர் பொறியியல் பரிந்துரைகளுக்கு ஏற்ப கட்டுமானத் தொகுதிகள் இருந்தனவா என்பதை அறிய களஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டும். | V- வடிவில் தரையையும் மதிப்பிடப்பட்ட குவாரியை விட மிகவும் வலிமையானதாக நிறுவப்பட்டுள்ளதுடன் மேலும் ஒப்பந்தக்காரரினால் மேலதிகமாக மேற்கொண்ட வேலைக்காக ரூபா 4,500 வினை விட ரூபா 2,862 மேலதிகமாக வழங்கப்பட்டது. |
| (எ) | மேற்கண்ட கட்டிடத்தின் தண்டவாளங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய நிக்கல் கோட் இலக்கம் 302 இன் கீழ் நல்ல தரத்தில் இருக்க வேண்டும் என்று பொறியியல் பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தாலும் நோக்கத்திற்காக ரூபா 101,506 செலுத்துவதற்கு முன், ஆய்வக அறிக்கைகள் மூலம் நிக்கலின் தொடர்புடைய தரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செலுத்துவதற்கு முன்னர் ஆய்வு பரிசோதனைகள் மற்றும் பொருத்தமான பரிசோதனைகளின் அறிக்கைகள் பெறப்பட்டு தரமானது சரிபார்க்கப்பட வேண்டும். | |
| (ஏ) | வவுனியா பிரதேச செயலகம் ரூபா 1,476,918 செலவு செய்யப்பட்டு நாகரிப்பிகுளத்தில் ஒரு சமூக மண்டபத்தை கட்டியிருந்தது. பொறியியல் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 112,887 மதிப்புள்ள 02 படைப்புகள் பொறியியல் மதிப்பீட்டின் பணி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளின் படி மேற்கொள்ளப்படவில்லை எனினும் முழுமையான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன. | பொறியியலாளரின் மதிப்பீட்டின் கீழான விசேட விபரக்குறிப்பின் படி வேலை முடிவடைந்த பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | ரூபா 2.5 மில்லியன் செலவில் வவுனியாவின் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சிறிரம்புரம் கிராமிய சுகாதார மையத்தின் கட்டுமானங்கள் திருப்திகரமாக வழங்கப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 நவம்பர் 02 திகதியிட்ட பணி நிறைவு அறிக்கைக்கு செயலாளர் வவுனியா அனுமதி பெறப்பட்டது. இருப்பினும் பொறியியல் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 14,474 மதிப்புள்ள 02 பொருட்களின் செயல்களைச் செயல்படுத்தாதது, கட்டிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட 4'x4' அளவிலான ஜன்னல்களை சரியாக மூடுவதில் உள்ள சிக்கல்கள்,மரப் பாதுகாப்புகளை மரக்கட்டைகளில் பயன்படுத்தாதது போன்ற குறைபாடுகள் பொறியியல் பரிந்துரைகளின்படி கூரைக்குப் பயன்படுத்தப்படுவதுடன், பணிகள் முடிந்ததும் அதை சுத்தம் செய்யாமல் பணி தளத்தை ஒப்படைக்கப்பட்டிருந்தன. அதன்படி, இந்த கட்டுமானம் தொடர்பான பணி நிறைவு அறிக்கைகள் தவறானவை என அவதானிக்கப்பட்டன. | பொறியியலாளரின் மதிப்பீட்டின் படி, வேலைப்பகுதியினை களப்பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் நிறைவேற்றபபட்ட வேலை தொடர்பான சரியான அறிக்கை பெறப்பட வேண்டும். | வேலை மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் சுத்தம் செய்யப்பட்டிருந்தன, ஆனால் அண்மையிலுள்ள குடியிருப்பாளர்களிடம் கால்நடைகள் இருப்பதால் அசுத்தமாகவே காணப்படுகின்றன. குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஒ) | வவுனியாவின் பிரதேச செயலகத்தினால் ரூபா 1,467,836 செலவில் கனேஷபுரம் பொது கல்லறை மண்டபத்தை கட்டியிருந்தது. பொறியியல் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 101,381 மதிப்புள்ள 02 உருப்படிகள் பொறியியல் மதிப்பீட்டின் பணி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரக்குறிப்புகளின்படி மேற்கொள்ளப்படவில்லை என்றாலும், கட்டுமானம் இருப்பதாக சான்றளிக்கும் போது மொத்தம் ரூபா 101,381 செலுத்தப்பட்டுள்ளது. திருப்திகரமாக முடிக்கப்பட்டது. | பொறியியலாளரின் மதிப்பீட்டின் கீழான விசேட விபரக்குறிப்பின் படி வேலை முடிவடைந்த பின்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீட்டில் செய்யப்படாத பணிகளை நிறுத்தி வைப்பதைக் குறைப்பதற்கும் எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டியின் பிரிவு 3.9.1 மற்றும் 3.9.2 இன் பிரகாரமும் மற்றும் முகாமைத்துவ குழுக்களின் பரிந்துரையின் பிரிவு 3.9.4 இன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் கட்டுமான வேலைகளுக்கான கேள்விமனு பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்து கோரப்பட்டலாம். எனினும் ரூபா 2,000,000 பெறுமதியினை விட குறைந்த கட்டுமான வேலைகளுக்கு பகிரங்க கேள்விமனு கோரப்படாமல் இருப்பினும் இக்கட்டுமானத்திற்கான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தடைப்பட்டதன் பின்னரே பிரதேச சமூக நலன்புரி சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இதனால் முதல் மேற்கொள்ளப்பட்ட பகிரங்க மனுகோரலுக்காக ஏற்பட்ட ரூபா 238,567 பெறுமதி பயனற்ற செலவினமாக காணப்படுகின்றது. | பெறுகை நடைமுறைகள் குறைந்த செலவினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் பெறுகை சமர்ப்பிப்பதற்கு முன்னர் சரியான ஒப்பந்தாரினை பெறுகைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டும். | முதலில் தேசிய ரீதியான பகிரங்க விலை கேள்வி மனு கோரப்பட்டு போட்டி அடிப்படையிலேயே ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டனர். இருப்பினும் ஒப்பந்தகாரர் தேவையைப் பூர்த்தி செய்யத்தவறியாமையினால் ஒப்பந்தமானது முடிவுறுத்தப்பட்டு பிரதேச சமூக நலன்புரி சங்கத்திடம் ஒப்பந்தம் மீள வழங்கப்பட்டது. |
| (ஆ) | மாவட்டச் செயலகத்தின் சிற்றூண்டிச்சாலையின் மாத வாடகையான ரூபா 10,000 பெறுமதியில் ரூபா 5,000 ஆனது மாவட்டச் செயலக ஊழியர் நலம்புரி சங்கக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தன. | அரசாங்கத்திற்கு நட்ட ஏற்படாத வகையில் சிற்றூண்டிச்சாலையின் வாடகை தீர்மானிக்கப்பட வேண்டும். | மாவட்ட செயலகத்தின் சிற்றூண்டிச்சாலையில் நலன்புரி சங்கத்தில் அனைத்து உபகரணங்களும் இருப்பதால், வாடகையின் ஒரு பகுதி சங்கத்திற்கு செலுத்தப்படுகின்றது. |
| (இ) | வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திலக்கினால் வேலைகளுக்கான மேற்கொள்வதற்கான பொருட்கள் சேவைகளுக்கான விலைமனுக்கள் கோரப்படாமல் 04 சந்தர்ப்பத்தில் ரூபா 119,650 பெறுமதியான பொருட்கள் சேவைகள் நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பொருட்கள் சேவைகளை பெறுவதற்கான கொள்வனவுக் கட்டளைகளை முன்னரே தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறுகை வழிகாட்டியின் துணைப்பிரிவு இலக்கம் 33இற்கு படி ரூபா 15,000 இற்கு குறைவான பெறுமதிகளுக்கே இவ்வாறு பெறப்பட்டிருந்தன. முன்னரே கொள்வனவு செய்வதற்கான விலைமனுவினை தயாரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 யூலை 25 ஆம் திகதி உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒரு ராக்டருடனான தாங்கியும் மற்றும் வெங்கலச்செட்டிக்குளப் பிரதேச செயலக அலுவலகத்திலுள்ள மோட்டார் வண்டிகள் 2015 ஆகஸ்ட் 31 இலிருந்து 2018 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இயந்திரங்கள் பொருத்தமான வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது அவற்றைப் பயன்படுத்தக்கூடிய மற்றொரு நிறுவனத்திற்கு ழங்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.5 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வவுனியா மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலகத்தில் சேவை புரிகின்ற அரச உத்தியோகத்தருக்கான பிணைப்பணமாணது நிதி பிரமாணம் 880(1) இற்கு அமைய பிணைப்பணம் வைப்பிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880(1) இற்கு அமைய பிணைகள் பெறப்பட வேண்டும். | பிணை பெறப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

### 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெங்கல செட்டிக்குளம் பிரதேச செயலகத்திகால் ரூபா 124,980 பெறுமதியில் உள்ளக கட்டுப்பாட்டிற்காக கேமரா | போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகள் பேணப்பட வேண்டும் | பாதுகாப்பு கேமரா அமைப்பில் போதுமான உள்ளக கட்டுப்பாட்டை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தப்பட்டிருந்தன. எனினும் இதனை பாராமரிப்பதற்கான பொறுப்பு எந்தவொரு அதிகாரிக்கும் குறிப்பாக ஒதுக்கப்படடிருக்கவில்லை, மேலும் தரவுகளை பாதுகாப்புதற்கு சேகரிப்பதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நிர்வாக கடவுச்சொல் (Admin Password) அலுவலக அதிகாரிகளுக்கு இடையில் பாரிமாறி கொண்டு பயன்படுத்தப்படுவதன் மூலம் தரவுகள் அழிக்கப்பட்டிருக்கின்றமை காணப்படுகின்றன. | | வருகிறது. நிர்வாக கடவுச்சொல் (Admin Password) பிரதேச செயலாளரிடமுள்ளது. |
| (ஆ) | முன்னாள் மாவட்ட செயலாளரின் கணவரினால் ஏ9 வீதி ஊடான ஓமந்கையிலுள்ள் அரசு காணியில் அனுமதிகள் பெறப்படாமல் கட்டடம் அமைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக பிரதேச செயலாளரால் எந்தவிதமான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாநகர சபை அல்லது பிரதேச சபையினால் கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படலாம். ஆனால் பிரதேச செயலகத்தினால் கட்டடம் அங்கீகரிக்கப்படமாட்டாது. |
| (இ) | நொச்சிமூட்ட கிராம சேவையாளர் பிரிவுக்கு சொந்தமான தம்பானாகுளத்திடமுள்ள அரசுக்கு சொந்தமான 9.4 ஏக்கர் காணியினை மூன்று பேரினால் சட்ட விரோதமாக பயன்படுத்தபடுகின்ற போதிலும் இது தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளரினால் எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.. | வவுனியா பிரதேச செயலாளரினால் அங்கீகரிக்கப்படாது பயன்படுத்தப்படுகின்ற காணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 83 ஆம் பிரிவு பிரகாரம் செயல்பட எந்தவொரு ஏற்பாடும் இல்லாததால், நில ஆணையர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு | உள்ளக கணக்காய்வு அறிக்கையினுடைய பிரதியினை | Online முறைமையின் கீழ் கணக்காய்வு அறிக்கை அனுப்பி |

| | | |
|---|---|---|
| அதிகாரச்சட்டத்தின் 40(4) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வழங்கப்பட்டிருந்த 20 கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வாளர்களினால் அனுப்பி வைக்கப்பட வேண்டும். | வைக்கப்பட்டுள்ளது. |